தேர்ச்சி : 18.0

வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் வணிகத்திட்டமொன்றைத் தயாரிப்பர்

தேர்ச்சி மட்டம் 18.1

வணிகத்திட்டமொன்றின் அடிப்படை அம்சங்களைக் கேட்டறிந்து வணிக எண்ணத்திற்குப் பொருத்தமான வணிகத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆயத்தத்தை வெளிப்படுத்துவார்.

கற்றற் பேறுகள்

- ❖ வணிக எண்ணத்தைத் தெளிவுபடுத்துவார்.
- ❖ பொருத்தமான வணிக எண்ணமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய சிற்றின, பேரினக் காரணிகளை விளக்குவார்.
- ❖ வணிக எண்ணங்களைப் பேரின, சிற்றினப் பகுப்பாய்விற்கு உட்படுத்திப் பொருத்தமான வணிகச் சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்வார்.
- ❖ வணிகத் திட்டத்தினை அறிந்து கொள்வார்.
- ❖ வணிகத்திட்டமொன்றின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.
- ❖ வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- ❖ வணிகத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பகுதிகளைப் பட்டியற்படுத்துவார்.

வணிக எண்ணம்

தனிநபரொருவரின் அல்லது அமைப்பொன்றின் தேவையொன்றை அல்லது விருப்பமொன்றை நிறைவேற்றக்கூடிய உற்பத்தியொன்று தொடர்பாக முயற்சியாளரொருவரிடம் உருவாகக்கூடிய சிந்தனை **வணிக எண்ணம்** ஆகும். இதனைப் **பேரின** மற்றும் **சிற்றினப்** பகுப்பாய்வு செய்வதன் மூலம் **வணிக சந்தர்ப்பமொன்றை** தீர்மானிக்க வேண்டும்.

பேரினப்பகுப்பாய்வு

வணிக எண்ணங்கள் அனைத்திலிருந்தும் பொருத்தமான வணிக எண்ணத்தை இனங்காண்பதற்காகச் சகல எண்ணங்களையும் மதிப்பீட்டிற்குப்படுத்துதலைப் பேரினப்பகுப்பாய்வு குறிக்கின்றது. இங்கு வணிகத்தின் புறச்சூழல் காரணிகளுக்கமைய மதிப்பீடொன்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பேரினச்சூழல் காரணிகள் (உதாரணம்)

- ○ பொருளாதாரச்சூழல்
- ○ மக்கள் சூழல்
- ○ சமூக, கலாசாரசூழல்

சிற்றினப் பகுப்பாய்வு

பேரினச்சூழல் காரணிகள் மூலம் இனங்காணப்பட்ட வணிக எண்ணங்களுள் முயற்சியாளருக்கு மிகவும் அனுகூலத்தைப் பெற்றுக்கொடுக்கின்ற வணிக எண்ணத்தைத் தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளுதல் சிற்றினப் பகுப்பாய்வு ஆகும். இங்கு இரு காரணிகள் மீது கவனம் செலுத்தப்படும்.

(1) அகச்சூழல் காரணிகள் (உதாரணம்)

- உரிமையாளர்கள்
- முகாமையாளர்கள்
- ஊழியர்கள்
- வளங்கள்

(2) அண்மிய சூழல் காரணிகள் (உதாரணம்)

- வாடிக்கையாளர்கள்
- வழங்குநர்கள்
- போட்டியாளர்கள்

வணிகத்திட்டம் (Business Plan)

வணிகமொன்றின் நோக்கங்களையும் இலட்சிய நோக்குகளையும் அவற்றை அடைந்து கொள்ளக்கூடிய வழிமுறைகளையும் விபரிக்கின்ற அட்டவணையே வணிகத்திட்டம் எனப்படும். இது வணிக எண்ணத்தின் செல்பாதையைச் சுட்டிக் காட்டுகின்ற வழிமுறையாகக் காணப்படும்.

வணிகத்திட்டமொன்றின் முக்கியத்துவம்

- வணிகத்திட்டத்தின் மூலம் வணிகம் எதிர்காலத்தில் எவ்விடத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.
- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கு வணிகம் தொடர்பான தெளிவொன்றைப் பெற்றுக்கொடுத்தல்
- வணிகத்திற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு
- வணிகத்திற்குத் தேவையான வளங்களை இனங்காண்பதற்கும் வளங்களைச் சரியானவாறு ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் இலகுவாக அமைதல்
- சகலவற்றையும் பொருத்தமானவாறு சுட்டிக்காட்டுவதன் மூலம் எதிர்கால வணிக நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் ஒழுங்கமைப்பதற்கு முடியுமாக இருத்தல்
- வணிகத்தின் செயலடைவினை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்
- வணிகத்தின் பதவிகளுக்கு ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கு உதவியாக அமையும்.
- மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் இலகுவானதாக அமையும்.

வணிகத்திட்டமொன்றைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

வணிகத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு வணிகரிடம் சிறந்த விளக்கமொன்றிருக்க வேண்டும். என்பதுடன் முழுத்திட்டத்திலும் பின்வரும் விடயங்கள் மீது அவதானம் செலுத்துதல் வேண்டும்.

- தெளிவான எல்லை (Focus)
  நிறுவனம், முன்வைக்கப்படும் பொருட்கள், சேவைகள், வணிகத்தை ஆரம்பிப்பது எவ்வாறு?, இதனை விருத்தி செய்வது எவ்வாறு?, என்பன பற்றி தெளிவாக இருத்தல் வேண்டும்.

- வாடிக்கையாளர்கள் (Cusmerrs)
  இலக்கு வாடிக்கையாளர்களைத் தெளிவாக இனங்காணலும் அவர்களை எவ்வாறு அடைந்து கொள்வது என்பதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுதல்

- இலக்கு (Target/ Goal)
  பிரதான இலக்கு மற்றும் அவற்றை அடைந்து கொள்ளக்கூடிய முறை, அவை சந்தைப்படுத்தலுக்கு நியாயமானதா என்பது தொடர்பாகவும் இலக்குகளின் வெற்றி தோல்வித்தன்மை தொடர்பாக எவ்வாறு மதிப்பீடு செய்வது என்பன தொடர்பான தகவல்களைக் காட்டுதல்

- தேவையான நிதிவளங்கள் (Financial Resources)
  வணிகத்தை ஆரம்பித்து நடத்திச் செல்வதற்குத் தேவையான மூலதனம் எவ்வவளவு என்பதும் தேவையான மூலதனம் எவ்வாறு திரட்டப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டுதல்

வணிகத்திட்டமொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய பிரிவுகள்

- முன்பக்கம் - Cover page
- நிறைவேற்றுச் சுருக்கம் - Executive summary
- வணிக விபரம் - Company details
- சந்தைப்படுத்தல் திட்டம் - Marketing Plan
- செயற்பாட்டுத்திட்டம் - Operational Plan
- மனிதவளத்திட்டம் – Human Resources Plan
- நிதித்திட்டம் - Financial Plan
- பின்னிணைப்புக்கள் - Apendixes

ஒப்படை

- உம்மிடம் ரூபா 100000 உள்ளது என கருதிக்கொள்க.
- இப்பணத்தொகையினால் மேற்கொள்ளக்கூடிய வணிக எண்ணங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்.
- அவ்வணிக எண்ணங்களுள் பொருத்தமான வணிக சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய பேரினச் சூழல் காரணிகளின் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்.

- மிகவும் கூடிய அனுகூலங்களைப் பெற்றுத் தருகின்ற வணிக எண்ணத்தை தெரிவு செய்வதற்காக அவதானம் செலுத்த வேண்டிய அண்மிய மற்றும் அகச்சூழல் காரணிகள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்

- இதற்கமைய மிகச்சிறந்த வணிக சந்தர்ப்பத்தைப் பெயரிட்டுக் காட்டவும்.
- அதற்கான காரணங்களை முன்வைக்கவும்

தேர்ச்சி மட்டம் : 18.2

வணிக எண்ணத்திற்குப் பொருத்தமான சந்தைப்படுத்தல் திட்டத்தை தயாரிப்பர்

கற்றற் பேறுகள்

- சந்தைப்படுத்தல் திட்டத்திற்கு விளக்கம் கூறுவர்.
- சந்தைப்படுத்தல் திட்டத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவர்.
- சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்களை விபரிப்பர்.
- வழங்கப்பட்ட தகவல்களின் ஊடாக சந்தைப்படுத்தல் திட்டத்தைத் தயாரிப்பர்.

சந்தைப்படுத்தல் திட்டம்

சந்தையின் போட்டி நிலைமைகள், சந்தை உபாய வழிமுறைகள் விற்பனை எதிர்வுகூறல் ஆகிய தகவல்களை விரிவாக முன்வைக்கப்படுகின்ற பகுதி சந்தைப்படுத்தல் திட்டமாகும்.

சந்தைப்படுத்தில் திட்டத்தின் முக்கியத்துவம்

- உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான அளவில், விருத்தியடைந்து செல்லும் சந்தையொன்றும் உள்ளது எனச்சுட்டிக்காட்டுவதற்கு
- சந்தையில் போட்டி நிலைமைகளுக்கு முகங்கொடுக்க முடிதல் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு

சந்தைப்படுத்தல் திட்டத்தில உள்ளடங்கும் விடயங்கள்

- கைத்தொழிலும் சந்தைப்பகுப்பாய்வும்
- விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கும் பொருள் அல்லது சேவை
- இலக்குச்சந்தை
- போட்டித்தன்மையினை பகுப்பாய்வு செய்தல்
- உத்தேச விற்பனை
- போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்
- முன்மொழியப்பட்ட விற்பனை உபாய வழிமுறைகள்
- உற்பத்திப்பொருள் உபாய வழிமுறைகள்
  - விலை உபாய வழிமுறை
  - விநியோக முறை
  - மேம்படுத்தல் முறை
- வருடாந்த விற்பனை எதிர்வுகூறல்
- சந்தைப்படுத்தல் செலவுகள்

மேல்காட்டியவற்றை விரிவாக நோக்குவோம்.

தொழிலும், சந்தைப்படுத்தல் பகுப்பாய்வும்

இங்கு குறித்த தொழில் தொடர்பாக முழுமையான விபரமொன்று முன்வைக்கப்படும். தொழிலின் சமகால நிலைமை, விற்பனைகள், இலாபம், விருத்தி விகிதம் மற்றும் ஏனைய நவீன போக்குகள் தொடர்பிலான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்படும்.

இங்கு பின்வரும் வினாக்களுக்கு தீர்வு காணப்படும்.

- ✓ கொள்வனவாளர் யார்?.
- ✓ சந்தையானது பிரதேசத்திற்கானதா? உள்நாட்டிற்காகவா?, சர்வதேச ரீதியானதா என்ற வகையில் வினாக்கள் வினாவப்படும்.

உற்பத்திப்பொருள்

சந்தைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உற்பத்திப்பொருள் தொடர்பான தகவல்களில் சில பின்வருமாறு.

- பொருள் அல்லது சேவை
- உற்பத்திப் பொருள் கலவை (நீளம், அகலம், ஆழம், தொடர்பான விபரம்))
- உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு
- ஒவ்வொரு உற்பத்திப் பொருட்களினதும் வடிவம், அளவு, வகை

இலக்குச் சந்தை தொடர்பாக முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள்

- இலக்குச் சந்தையும் அதன் துண்டங்களின் விசேட பண்புகளும்
- இலக்குச் சந்தையின் அடிப்படைப் போக்குகளும் உத்தேச மாற்றங்களும்
- இலக்குச் சந்தையினை அடைந்துகொள்ளக்கூடிய உபாய வழிமுறைகள்

போட்டி நிலைப்பகுப்பாய்வின் போது முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள்

- சமகாலத்தில் காணப்படும் போட்டி நிலைமை
- போட்டியாளர்களும் மற்றும் அவர்களது பலங்களும்
- போட்டி நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்குத் தன்னிடமுள்ள பலங்களும், பலவீனங்களும்
- சந்தையில் பிரவேசிப்பதிலுள்ள தடைகள் அதாவது கிரயம், காலம், தொழில்நுட்பம், ஆக்கவுரிமைப் பத்திரம், வியாபாரக்குறி போன்றன.

உத்தேச சந்தைப்படுத்தல் தொடர்பாக முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள்

- இலக்குச் சந்தையின் அளவு, உத்தேச வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அவர்களின் கொள்வனவு செய்யும் ஆற்றல், உத்தேச சந்தை வளர்ச்சி

போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள் தொடர்பாகக் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய விடயங்கள் பின்வருமாறு

- போட்டியாளர்களின் விலை
- உபாய வழிமுறைகள்
- விநியோக உபாய வழி

உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்கவேண்டிய தகவல்களுள் சில பின்வருமாறு

- உற்பத்திப் பொருள் உபாய வழிமுறை
- விலை உபாய வழிமுறை
- விநியோக உபாய வழிமுறை
- மேம்படுத்தல் உபாய வழிமுறை

விற்பனை எதிர்வுகூறல்

உற்பத்திப் பொருட்களின் வகை, விற்பனை அளவுகள், அலகொன்றின் விலை வருடாந்த வருமானம் போன்றன இதில் உள்ளடங்கும். இவற்றில் உள்ளடங்கும் மேலும் தகவல்கள் பின்வருமாறு.

சந்தைப்படுத்தல் செலவுகள்

விநநியோகச் செலவுகள், கழிவுகள், மேம்படுத்தல் செலவுகள், விற்பனைத் தரவு, சந்தைப்படுத்தலுக்குப் பயன்படுத்திய நீண்டகாலச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

தேர்ச்சி மட்டம் : 18.3

சந்தைப்படுத்தல் திட்டத்திற்கேற்பச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பார்.

கற்றற் பேறுகள்

- ❖ செயற்பாட்டுத் திட்டத்தை அறிந்துகொள்வார்.
- ❖ செயற்பாட்டுத் திட்டமொன்றின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்
- ❖ செயற்பாட்டுத் திட்டமொன்றில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள் விபரிப்பார்.
- ❖ வழங்கப்பட்ட தகவல்களினூடாக செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

செயற்பாட்டுத் திட்டம்

ஏதேனும் உற்பத்தியொன்றை உருவாக்கும் போது அவ்வுற்பத்திக்குரிய செயல்முறைகள், உற்பத்தியின் அளவு, உற்பத்திக்கிரயம், பயன்படுத்தப்படுகின்ற உள்நாட்டு, சர்வதேச நியமங்கள், உற்பத்திக்குரிய உபகரணங்கள், தொழிற்சாலையை நிறுவுவதற்கான இடம் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படுகின்ற பகுதியே செயற்பாட்டுத்திட்டம் எனப்படும்.

செயற்பாட்டுத்திட்டத்தின் முக்கியத்துவம்

- ○ எதிர்வரும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னரே விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்
- ○ உற்பத்திப் பொருளின் தரத்தினை மேம்படுத்தக்கூடியதாக இருத்தல்
- ○ உற்பத்திக் கருமங்களின் போது ஏற்படுகின்ற வீண்விரயங்கள், தாமதங்களைக் குறைத்துக்கொள்ள முடிதல்
- ○ உற்பத்தி அலகொன்றின் கிரயத்தை முன்னரே உறுதிப்படுத்திக்கொள்ள முடிதல்

செயற்பாட்டுத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் (பகுதிகள்)

- ○ நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேவைப்பாடு
- ○ மூலப்பொருள் தேவைப்பாடு
- ○ ஊழியர் தேவைப்பாடு
- ○ உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயம்
- ○ தொழிற்சாலையின் தள அமைப்புத்திட்டம்
- ○ கழிவுப் பொருள் அகற்றல்
- ○ சமூக மற்றும் சூழல் தாக்கங்கள்
- ○ மொத்த உற்பத்திக் கிரயமும் அலகுக் கிரயமும்
- ○ வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டுக் கருமங்களும் கிரயங்களும்

உற்பத்தி இயலளவு

குறித்த காலப்பகுதியொன்றினுள் உற்பத்தி செய்முறைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உள்ளீகளுக்கேற்ப பெற்றுக்கொள்ளக்கூடிய உச்ச உற்பத்தி அலகுகளின் அளவாகும்.

நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேவைப்பாடு

உற்பத்திச் செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் கட்டடம், இயந்திர உபகரணம், மோட்டார் வாகனம் போன்ற சொத்துக்கள் தொடர்பில் ஏற்க வேண்டி ஏற்படும் கிரயமும் மற்றும் அச்சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வுகளும் இதனுள் அடங்கும்.

மூலப்பொருள் தேவைப்பாடு

உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அலகுகளின் அளவு, அதற்கமையத் தேவையான மூலப்பொருட்களின் அளவு, அதற்காக ஏற்க வேண்டிய கிரயம் போன்ற தகவல்கள் இதனுள் காட்ட முடியும்.

ஊழியர் தேவைப்பாடு

உற்பத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றும் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்குதல் அதாவது தேவைப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கை, ஊழியர்களின் தன்மை, அவர்களுக்கு வழங்கப்படும் வேதனங்கள் பணிக்கொடைகள் போன்ற தகவல்கள் இதனுள் அடங்கும்.

உற்பத்திப் பொதுமேந்தலைக் கிரயம்

உற்பத்தி நடவடிக்கைகளிற்குரிய செலவுகளாக இருப்பினும்கூட உற்பத்தி அலகுகளிலிருந்து நேரடியாக வேறுபத்தி இனங்காண முடியாத பொதுவாக ஏற்படும் கிரயம் உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயம் எனப்படும். இது தொழிற்சாலை பொது மேந்தலைக் கிரயம் என்றும் அழைக்கப்படும். இதற்கமைய உற்பத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிட வேண்டி ஏற்படுகின்ற கிரயங்கள் நேரில் பொருள் கிரயம், நேரில் கூலிக்கிரயம், ஏனைய நேரில் செசலவுகள் என இனங்காணப்பட்டு இதில் உள்ளடக்கப்படும்.

தொழிற்சாலையின் தள அமைத்திட்டம்

உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பொருத்துதல்கள் என்பன நிறுவப்பட வேண்டிய முறை தொடர்பாக முன்வைக்கப்படும் திட்டமே தொழிற்சாலைத் தள அமைப்புத்திட்டமாகும்.

கழிவுப்பொருள் அகற்றல்

உற்பத்திச் செயல்முறைகளின் காரணமாக உருவாகின்ற கழிவுப்பொருட்களை அகற்குவதற்காக ஏற்படுகின்ற கிரயம் தொடர்பான தரவுகளும் தகவல்களும் இதில் உள்ளடக்கப்படும்.

சமூக மற்றும் சூழல் தாக்கங்கள்

உற்பத்திச் செயல்முறைகளின் காரணமாக சமூகத்திற்கும் சூழலுக்கும் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களை இழிவுபடுத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் அதற்காக மதிப்பிடப்பட்ட கிரயமும் இதில் உள்ளடக்கப்படும்.

மொத்த உற்பத்திக் கிரயமும் அலகுக் கிரயமும்

குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்காக ஏற்க வேண்டி ஏற்படும் என எதிர்பார்கப்படுகின்ற செலவுகளின் மொத்தமானது மொத்த உற்பத்திக் கிரயம் எனப்படும். மொத்த உற்பத்திக் கிரயமானது நேர் கிரயம், நேரில் கிரயம் என வகைப்படுத்தப்படும்.

மொத்த உற்பத்திக்கிரயம் - இது இருவகைப்படும்

- நேர் கிரயம் - இது மூன்று வகைப்படும்
  - நேர் பொருள் கிரயம்
  - நேர் கூலிக்கிரயம்
  - ஏனைய நேர் கிரயம்

- நேரில் கிரயம் - இது மூன்று வகைப்படும்
  - நேரில் பொருள் கிரயம்
  - நேரில் கூலிக்கிரயம்
  - ஏனைய நேரில் கிரயம்

மொத்த உற்பத்திக் கிரயத்தை உற்பத்தி செய்த பொருட்களின் அலகுகளின் எண்ணிக்கையினால் வகுக்கும் போது அலகுக்கான உற்பத்திக் கிரயம் கிடைக்கப்பெறும்.

வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டுக் கருமங்களும் செலவுகளும் பின்வருமாறு

- ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்
- வணிகத்தைப் பதிவு செய்வதற்காக ஏற்படும் செலவுகள்
- மூலதன ஈட்டலுக்காக ஏற்படும் செலவுகள்
- தேவையான நடைமுறை அல்லாச் சொத்துக்களைக் கையகப்படுத்திக் கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்

தேர்ச்சி மட்டம் 18.4

வணிகத்தின் மனிதவளத் திட்டத்தை தயாரிப்பர்

கற்றற் பேறுகள்

- ❖ மனிதவளத் திட்டத்தை அறிந்து கொள்வார்
- ❖ மனதவளத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்
- ❖ மனிதவளத் திட்டமொன்றில் உள்ளடக்கபட வேண்டிய விடயங்களை விபரிப்பர்
- ❖ வழங்கப்பட்ட தகவல்களினூடாக மனிதவளத் திட்டமொன்றைத் தயாரிப்பர்.

மனிதவளத்திட்டம்

வணிகமொன்றின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் பொருட்டு எதிர்கால மனித வளத்தேவையினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் அதற்குரிய கிரயத்தினை மதிப்பீடு செய்து தயாரிக்கப்படுகின்ற திட்டம் மனிதவளத்திட்டமாகும்.

மனிதவளத்திட்டத்தின் முக்கியத்துவம்

- ○ எதிர்கால ஊழியர் தேவையினையும் கிரயத்தினையும் எதிர்வுகூறக்கூடியதாக இருத்தல்
- ○ மனித வளத்தை மிக வினைத்திறனாகவும் சிறப்பாகவும் பயன்படுத்த முடிதல்
- ○ எதிர்கால ஊழியர் தேவையினை முன்னரே இனங்கண்டு கொள்வதன் மூலம் வணிகக்கருமங்கள் மந்தமடைந்து செல்வதைக் குறைத்துக் கொள்ள முடிதல்
- ○ அவசரமாக இணைத்துக் கொள்ள வேண்டி ஏற்படும் போது செலவுகளைக் குறைத்துக்கொள்ள முடிதல்
- ○ உயர் தேர்ச்சிகளுடன் கூடிய ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறல்

மனிதவளத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

- ○ முயற்சியாளர்கள்/ பங்குதாரர்கள் தொடர்பான விபரம்
- ○ முகாமைத்துவத் திறன்
- ○ நிறுவனக் கட்டமைப்பின் அடிப்படைப்பதவிகளும் பொறுப்புக்களும்
- ○ அமைப்பு வரைபடம்
- ○ வருடாந்தச் செலவுகள்

முயற்சியாளர்கள்/ பங்குதாரர்கள் தொடர்பான விபரம்

இங்கு முயற்சியாளர்கள்/ பங்குதாரர்களின் தனிப்பட்ட தகவல்கள், பெயர்கள், முகவரிகள் போன்றன குறிப்பிடல் வேண்டும். இங்கு அமைப்பொன்றின் முகாமையாளர்களின் கல்வித்தகைமைகள், அனுபவங்கள், பலங்கள் என்பன தொடர்பாக வெவ்வேறாகக் குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

நிறுவனக் கட்டமைப்பின் அடிப்படைப் பதவிகளும் பொறுப்புக்களும்

மனிதவளத் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது அமைப்பின் பல்வேறு கருமங்களுக்குரிய பதவிகளை உருவாக்குவதும் பதவிகளுக்குரிய கருமங்கள், பதவிகள் அதிகாரங்கள், பொறுப்புக்கள் என்பன சுட்டிக்காட்டப்படல் கட்டாயமானதாகும்.

மனிதவளத் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது அமைப்பின் பல்வேறு கருமங்களுக்குரிய பதவிகளை உருவாக்குவதும் பதவிகளுக்குமுரிய கருமங்கள், பதவி, அதிகாரங்கள், பொறுப்புக்கள் என்பன சுட்டிக்காட்டல் காட்டாயமானதாகும்.

உதாரணம்

பதவிகள்	செயற்பாடுகள்	பொறுப்பு
பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO)	○ வணிக முகாமைத்துவக் கருமங்களுக்குரிய தீர்மானங்களை எடுத்தல் ○ தந்திரோபாயத்திட்டம் தொடர்பான தீர்மானம் எடுத்தல்	முழுமையான அமைப்பிற்கும்

(அமைப்பின் தன்மைக்கமைய பதவிகளும் தொழிற்பாடுகளும் மாற்றமடையலாம்)

அமைப்பொன்றில் காணப்படும் பல்வேறு பிரிவுகளுக்கும் பதவிகளுக்குமிடையே காணப்படும் இடைத்தொடர்பே நிறுவனக் கட்டமைப்பு எனப்படுவதுடன் நிறுவனக்கட்டமைப்பினை அமைப்பு வரைபடமொன்றின் மூலம் பொழிப்பாக்கிக் காட்ட முடியும்.

வருடாந்த செலவுகள்

வணிக நிறுவனத்தின் தன்மைக்கேற்ப காணப்படுகின்ற பல்வேறு பதவிகளின் சார்பாகச் செலுதப்படுகின்ற சம்பளமும் கூலிகளும் வித்தியாசப்படும். மனித வளத்திற்குரிய வருடாந்த மொத்தக்கூலிச் செலவானது நேரக்கூலிச் செலவு, நேரில் கூலிச்செலவுகள் எனும் வகையிலும் வேறுபடுத்தி இனங்காண முடியும். இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் மொத்த முகாமைத்துவச் செலவுகளும் இத்திட்டத்தினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

தேர்ச்சி மட்டம் 18.5

வணிகத்தின் நிதித்திட்டத்தைத் தயாரிப்பர்

கற்றற் பேறுகள்

- நிதித்திட்டத்தினை அறிந்துகொள்வார்.
- நிதித்திட்டத்தினைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவார்
- நிதித்திட்டத்தில் உள்ளடக்கவேண்டிய விடயங்களைப் பட்டியற் படுத்துவார்
- நிதித்திட்டத்தின் ஒவ்வொரு கூறுகளையும் தெளிவுபடுத்துவார்
- நிதித்திட்டத்தின் ஒவ்வொரு கூறுகளின் கீழும் சுட்டிக்காட்ட வேண்டிய விடயங்களைத் தெளிவுபடுத்துவார்.
- வழங்கப்பட்ட தகவல்களின் ஊடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய செயற்றிட்டக் கிரயத்தை மதிப்பீடு செய்வார்.

- வழங்கப்பட்ட தகவல்களின் ஊடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றைத் தயாரிப்பார்
- வழங்கப்படட தகவல்களின் ஊடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய மதிப்பிடப்பட்ட பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பர்.
- வழங்கப்பட்ட தகவல்களின் ஊடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய நிதிநிலைமைக்கூற்றைத் தயாரிப்பர்
- வழங்கப்பட்ட தகவல்களின் ஊடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய மதிப்பிடப்பட்ட கடன் மீளச்செலுத்தும் அட்டவணையைத் தயாரிப்பர்.

நிதித்திட்டம்

வணிகமொன்றில் சகல மதிப்பிடப்பட்ட நிதித்தகவல்களையும் உள்ளடக்கப்படும் பகுதியை நிதித்திட்டம் எனப்படும்.

நிதித்திட்டம் தயாரிப்பதன் முக்கியத்துவம்

- வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான முதலீட்டின் அளவினைத் தீரமானிப்பதற்கும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கும்
- வணிக நிதியத்தை முதலீடு செய்தல் தொடர்பான தீரமானம் எடுப்பதற்கு
- நிதிப்பற்றாக்குறை ஏற்படக்கூடிய காலத்தை இனங்கண்டு அதற்கான தீர்வுகளில் ஈடுபடுவதற்கு
- நிதி மேலதிகம் ஏற்படும் காலத்தை இனங்கண்டு அந்நிதியினை உற்பத்தித்திறன் கொண்ட கருமங்களில் ஈடுபடுத்துவதற்கு

நிதித்திட்டமொன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்

- மதிப்பிடப்பட்ட கருச்செயற்பாட்டுத் திட்டக்கிரயம் (மூலதனத் தேவைப்பாடு)
- மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று
- மதிப்பிடப்பட்ட காசு (காசுப் பாய்ச்சல் கூற்று)
- மதிப்பிடப்பட்ட நிதி நிலைமைக்கூற்று
- கடன் மீளச் செலுத்துகை அட்டவணை

மதிப்பிடப்பட்ட கருச் செயற்பாட்டுத் திட்டக்கிரயம் (மூலதனத் தேவைப்பாடு)

தெரிவு செய்த வணிக எண்ணத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு நடத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கின்ற கருச் செயற்றிட்டத்திற்காக ஏற்பதற்காக வேண்டி ஏற்படும் கிரயம் என்றழைக்கப்படும்.

கருச்செயற்றிட்டக் கிரயம் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியது

○ மொத்த நிலையான கிரயம்

வணிக நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்காகத் தேவையான நீண்டகால வாழ்தன்மை கொண்ட சொத்துக்களுக்கான கிரயத்தைக் குறிக்கும்.

உதாரணம் :

காணிகட்டம், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், ஏனைய உபகரணங்கள்

○ செயற்பாட்டுச் செலவுகள்

செயற்பாட்டுக் கருமங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேவையான செலவுகளைக் குறிக்கும்.

உதரணம் :

- இடத்தை விருத்தி செய்வதற்கு
- நீர், மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு
- அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு
- வணிகத்தைப் பதிவு செய்வதற்கு

மொத்தத் தொழிற்படு மூலதனம்

அன்றாட வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்காக ஏற்க வேண்டி ஏற்படும் நிதியமானது தொழிற்படு மூலதனம் எனப்படும்.

உதாரணம் :

- மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு (நேர்க்கிரயம்)
- உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயங்களைச் செய்வதற்கு
- நிர்வாகப் பொது மேந்தலைக் கிரயங்களைச் செய்வதற்கு
- விற்பனைப் பொது மேந்தலைக் கிரயங்களைச் செய்வதற்கு

மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று

உத்தேச வருமானங்கள், உத்தேச விற்பனைப் பொருட்களின் கிரயங்கள், உத்தேசச் செயற்பாட்டுச் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையே மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று எனப்படும்.

மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்

- **விற்பனை வருமானம்**

உடன்காசு விற்பனைகள், கடன் விற்பனைகள் என்பனவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்திலிருந்து உட்திரும்பல்கள் கழிக்கப்பட்ட பின் பெறப்படும் வருமானமே விற்பனை வருமானமாகும்.

- **விற்பனைக் கிரயம்**

வணிகமொன்றின் ஆரம்ப இருப்புடன் கொள்வனவுகள் மற்றும் உட்சுமைக்கூலிகள் என்பன சேர்க்கப்பட்டு வெளித்திரும்பல் இறுதி இருப்பு என்பன கழிக்கப்பட்டபின்னரான பெறுமதியே விற்பனைக் கிரயமாகும்.

- மொத்த இலாபம்

விற்பனை வருமானத்திலிருந்து விற்பனைக் கிரயத்தைக் கழித்த பின்னர் கிடைக்கப்பெறும் இலாபமே மொத்த இலாபமாகும்.

- **செயற்பாட்டு இலாபம்**

மொத்த இலாபத்துடன் வருமான வருமானங்கள் சேர்க்கப்பட்டு வருமானச் செலவுகள் கழிக்கபபட்டதன் பின்னர் கிடைக்கும் இலாபமே செயற்பாட்டு இலாபமாகும்.

- **வரிக்குப் பின்னரான இலாபம்**

செயற்பாட்டு இலாபத்திலிருந்து வருமான வரி கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கும் இலாபமே வரிக்குப் பின்னரான இலாபமாகும்.

- **மதிப்பிடப்படட காசுப் பாய்ச்சல் கூற்று**

குறிப்பிட்ட நிதியாண்டினுள் வணிகத்தினுள் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் தொடர்பான மதிப்பீடுகள் உட்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்படும் அட்டவணையே மதிப்பிட்ட காசுப்பாய்ச்சல் கூற்று என்றழைக்கப்படும்.

காசுப்பாய்ச்சல் கூற்றொன்றில் நிதியாண்டொன்றில் மொத்தக்காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல், நிதியாண்டிறுதியிலுள்ள காசு மீதி என்பன உட்படும்.

மதிப்பிடப்படட காசுப் பாய்ச்சலொன்றில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்படும்

- காசு உட்பாய்ச்சல்

உதாரணம் :

- உரிமையாளரின் மூலதனம்
- கடன் உருவாக்கம்
- உடன்காசு விற்பனைகள்
- வருமானங்கள் பெறப்படல்
- கடன்படுனரிடமிருந்து பெற்ற காசு

- மொத்த காசு வெளிப்பாய்ச்சல்

உதாரணம் :

- நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்
- மூலப்பொருள் மற்றும் விற்பனைப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்
- காப்புறுதி, மின்கட்டணம், தொலைபேசிக்கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், வரி, சம்பளம் போன்ற கொடுப்பனவுகளுக்கான செலவுகள்
- கடன்தவணைக் கட்டணக் கொடுப்பனவு
- வரிச்செலுத்துகை

மதிப்பிடப்பட்ட நிதி நிலைமைக்கூற்று

குறிப்பிட்ட நிதியாண்டொன்றின் இறுதித்திகதியில் வணிகமொன்றின் நிதி நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்ற அட்டவணையே மதிப்பிடப்பட்ட நிதிநிலைமைக்கூற்று என அழைக்கப்படும்.

மதிப்பிடப்பட்ட நிதி நிலைமைக்கூற்றொன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளக்கப்படும்.

- நடைமுறை அல்லாச் சொத்துக்கள்
  வருடமொன்றைவிடக்கூடிய காலமொன்றிற்காகப் பிரயோகிக்கும் நோக்கில் கையாளப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் நடைமுறையில்லாச் சொத்துக்கள் எனப்படும்.

உதாரணம் :

காணி கட்டடம், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், உபகரணங்கள்

- நடைமுறைச் சொத்துக்கள்

வருடமொன்றில் அல்லது அதற்குச் குறைவான காலவரையறையொன்றினுள் தொடர்ந்து மாற்றமுறுகின்ற வளங்களைக் குறிக்கும்.

உதாரணம் :

இருப்பு, கடன்பட்டோர், காசு, வங்கி

- நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்

உதாரணம் :

வங்கிக்கடன்

- நடைமுறைப் பொறுப்புக்கள்

உதாரணம் :

கடன்கொடுநர், செலுத்த வேண்டிய செலவுகள், அட்டுறு வரி

கடன்மீளச் செலுத்துகை அட்டவணை

வணிகத்திற்குப் பெற்றுக்கொள்ளும் கடன் பணம், கடனுக்காக காசு வட்டி என்பன மீளச் செலுத்தும் முறை, நிதியாண்டுத் தொடக்கத்திலும் இறுதியிலும் உள்ள கடன் மீதி போன்ற விபரங்கள் இதில் அடங்கும்.

உதாரணம் :

கடன்கொடுத்தோர், செலுத்த வேண்டிய செலவுகள், அட்டுறு வரி

செயற்றிட்டத்தின் சுருக்கம்

மதிப்பிடப்பட்ட கிரயம், வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, கடன்மீளச் செலுத்துகை அட்டவணை, மதிப்பிடப்பட்ட நிதி நிலைமைக்கூற்று போன்றவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகவல்களின் சுருக்கமாக்கப்பட்ட அட்டவணையே செயற்றிட்டச் சுருக்கம் எனப்படும்.

தேர்ச்சி மட்டம் 18.6

வணிகத்திட்டத்திற்கேற்ப வணிக எண்ணத்தின் பொருத்தப்பாட்டினை மதிப்பார்.

கற்றற் பேறுகள்

- ❖ நிதி மற்றும் நிதியல்லா அறிக்கைப் பகுப்பாய்வினை அறிந்து கொள்வார்.
- ❖ நிதி அறிக்கைப் பகுப்பாய்வின் போது பயன்படுத்தப்படுகின்ற நிதி அல்லாத அளவீட்டுக் கருவிகளைத் தெளிவுபடுத்துவார்.
- ❖ நிதி அறிக்கைப்பகுப்பாய்வில் பயன்படுத்தப்படுகின்ற ˙நிதி அளவீட்டுக் கருவிகளைப் பட்டியற்படுத்துவார்.
- ❖ நிதி, நிதியல்லாத அளவீட்டுக் கருவிகளின் ஊடாக வணிகம் தொடர்பான தீர்மானங்களுக்கு வருவார்.

நிதி அறிக்கைப் பகுப்பாய்வு

நிதியாண்டிறுதியில் வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடானது நிதி அறிக்கைப் பகுப்பாய்வு எனப்படும். நிதி அறிக்கைப் பகுப்பாய்வின் போது நிதி அளவீட்டுக்கருவிகள் பயன்படுத்தப்படும்

உதாரணம் :

- சமப்பாடுப்புள்ளிப் பகுப்பாய்வு

நிதி அல்லாத அறிக்கைப் பகுப்பாய்வின் போது நிதி அல்லாத அளவீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்படும்.

உதாரணம் :

- போதுமான அளவு மூலப்பொருள் காணப்படுகின்றதா?

தேர்ச்சி மட்டம் 18.7

நிறைவேற்றுச் சுருக்கத்தைத் தயாரிப்பார்.

கற்றற் பேறுகள்

- ❖ நிறைவேற்றுச் சுருக்கம் என்பதை அறிந்து கொள்வார்
- ❖ நிறைவேற்றுச் சுருக்கத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவர்
- ❖ நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்களை விபரிப்பர்.

நிறைவேற்றுச் சுருக்கம்

வணிகத்திட்டத்திலே உள்ளடங்கும் அடிப்படை விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படும் பகுதியே நிறைவேற்றுச் சுருக்கம் ஆகும். வணிகத்திட்டமொன்றை பரிசீலணை செய்யும் நபரொருவருக்கு வணிகத்தின் பிரதான விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு முன்வைக்கப்படுதல் இங்கு இடம்பெறும். இதனை வாசித்ததன் பின்னர் வாசித்தவருக்கு, வணிகம் தொடர்பான உருவமொன்றை அவர் மனதில் உருவாக்கக்கூடியவாறு இது முன்வைக்கப்படல் வேண்டும்.

நிறைவேற்றுச் சுருக்கத்தின் அடிப்படைக்குறிக்கோள், வெளியகப் பிரிவினர்களை வணிகம் தொடர்பாக மேலும் கண்டறிவதற்கு ஊக்குவிப்பினை ஏற்படுத்துதல் ஆகும். நிறைவேற்றுச் சுருக்கமானது எச்சந்தர்ப்பத்திலும் சுருக்கமாகவும் கவர்ச்சிகரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

நிறைவேற்றுச் சுருக்கத்தின் முக்கியத்துவம்

- ○ முழுமையான வணிகத் திட்டம் தொடர்பாக முழுமையான பார்வையொன்றை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது.
- ○ வணிகத்திட்டம் தொடர்பான வழிகாட்டலொன்றைக் காட்டுகின்றது.
- ○ வணிகத்திட்டம் தொடர்பான நம்பகத்தன்மையை ஏற்படுத்துகின்றது.

நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கும் விடயங்கள்

- ○ வணிகத்தின் பெயரும் முகவரியும்
- ○ வணிகத்தின் வரலாறு
- ○ வணிகத்தின் தூரநோக்கு, குறிக்கோள், இலக்கு, இலட்சிய நோக்கு
- ○ உற்பத்தி செய்யப்படும் பொருள் அல்லது சேவை
- ○ போட்டியிட வேண்டி இருக்கும் சந்தை
- ○ வணிகத்தை வெற்றியடையச் செய்வதற்கும் போட்டி நிலைமைகளின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான காரணங்கள்
- ○ பிரதான முகாமைத்துவக் குழுக்கள்
- ○ மொத்த முதலீடு – வணிகரினால் ஈடுபடுத்தப்படும் மூலதன அளவு
- ○ உத்தேச கடன் பெறுமானம்.

இத்தேர்ச்சி (வணிகத்திட்டம்) தொடர்பாக கடந்த காலத்தில் (க.பொ.த உ.த) பரீட்சை (2015 – 2019) வினாவப்பட்ட வினாக்களை நோக்கும்வோம்

2019

பகுதி I

30. வணிகத்திட்டம் தொடர்பிலான வழிகாட்டலை வழங்குவதற்காகத் தயாரிக்கப்படும் சுருக்கம்

(1) நிறைவேற்றுச்சுருக்கம் (2) கிரயச்சுருக்கம்

(3) காசுப்பாய்ச்சல் சுருக்கம் (4) வருமானச்சுருக்கம்

(5) கடன்தொடர்பான சுருக்கம்

பகுதி II

வினா – 08

(iii) (ஆ) வணிகர் ஒருவருக்கு வணிகத்திட்டமொன்று முக்கியமானதாக அமைவதற்கான காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

……

……

……

……

(iv) (அ) சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைக்கூறுகளை விபரிக்குக.

……

……

……

……

(ஆ) போட்டிசார் பகுப்பாய்வொன்றின் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் நான்கினைத் தருக.

……

……

……

(v) செயற்றிட்ட மதிப்பீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'செயற்பாட்டிற்கு முந்திய செலவு' என்பதனை விளக்கி, அதற்கான உதாரணங்கள் **இரண்டினைத்** தருக.

.....

.....

.....

.....

2018

பகுதி I

30. வணிகத்திட்டத்தின் கூறொன்றைச் சரியாக விபரிக்கின்ற கூற்றைத் தெரிவு செய்க.
(1) போட்டிசார் மற்றும் சந்தை உட்புகுதல் தந்திரோபாயங்கள் உற்பத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல்
(2) வளத்தேவைப்பாடு மற்றும் உற்பத்திப் பொருள் நியமங்கள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(3) மனிதவளத் தேவைப்பாடுகள் நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்
(4) மதிப்பிடப்பட்ட சகல தகவல்களும் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்
(5) வணிகத் தந்திரோபாயங்களும் நிறுவனம்சார் கட்டமைப்பும் மனிதவளத்திட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும்.

39. (ஆ) திட்டங்களை தயாரிக்கும் போது, விற்பனைத் தொகையை மதிப்பிடல் ..... எதிர்வு கூறலில் உள்ளடக்கப்படுவதுடன் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாடு ..... திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

பகுதி II

வினா – 08

(iii) வணிகத்திட்டத்தின் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய பிரதான தந்திரோபாயங்கள் எவை?.

.....

.....

.....

.....

(iv) காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுவதுடன் வணிகமொன்றின் காசு வெளிப்பாய்ச்சலுக்குப் பொருத்தமான மூன்று உருப்படிகளையும் தருக.

.....

.....

.....

.....

(எ) சாமந்தி என்பவர் தனது தற்போதைய வணிகத்துக்கு மேலதிகமாக கால்நடை பண்ணையொன்றையும் ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றார். இந்நோக்கத்திற்காக செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்பட்டுள்ளீர். இச்செயற்றிட்ட அறிக்கையின் சுருக்கத்தில் நீர் உள்ளடக்கும் காரணிகளைக் குறிப்பிடுக.

.....

.....

.....

.....

2017

பகுதி I

28. வணிகத்திட்டம் தயாரிப்பதன் பிரதான நோக்கம்

(1) தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளலாகும்

(2) வணிகத்தின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுதலும் அதனைக் கொண்டு நடாத்துவதற்கான வழிகாட்டல்களுமாகும்.

(3) வித்தியாசமான தரப்பினருக்கு வணிகம் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குதலாகும்

(4) வணிகத்துக்குப் பொருத்தமான இடஅமைவைத் தெரிவு செய்தலாகும்.

(5) அரசாங்க ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாகும்.

50. வணிகமொன்றுக்கான சாத்தியத்தன்மை பற்றிய கற்கையை மேற்கொள்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு துறைகளைக் குறிப்பிடுக.

.....

.....

.....

……

பகுதி II

வினா – 08

(v) (அ) வணிகத்திட்டம் ஏன் முக்கியமானது என்பதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.

……

……

……

……

(ஆ) வணிகத்திட்டமொன்றின் ஒரு பகுதியாக செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான நான்கு தேவைப்பாடுகளைத் தருக.

……

……

……

……

2016

பகுதி I

50. நிதித்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான நான்கு தேவைப்பாடுகளை எழுதுக.

……

……

……..

……..

பகுதி II

வினா – 08

(iii) (அ) வணிகத்திட்டம் ஒன்றின் தேவைக்கான இரண்டு காரணங்களை எழுதுக.

……

……

……

……

(ஆ) பல்வேறு வணிகக் கருத்துக்களிலிருந்து அமுல்படுத்தக்கூடியதும் இறுதியானதும் முடிவானதுமான வணிகக் கருத்தைத் தெரிவு செய்யும் செயன்முறையின் படிமுறைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் குறிப்பைப் பூரணப்படுத்துக.

	பகுப்பாய்வின் தன்மை	**மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தும் காரணி வகை**
1		
2		

(iv) (அ) வணிகமொன்றின் நிதித்திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய இரண்டு பிரதான பகுதிகளைப் பெயரிக.

……

……

(ஆ) உற்பத்திக் கிரயங்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.

……

……

……

……

(v) வணிகமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் நபர் ஒருவர் நிதிப் பகுப்பாய்வை மேற்கொள்வதன் மூலம் எடுக்கத்தக்க தீர்மானங்கள் இரண்டை விபரிக்குக.

……

……

……

……

2015

பகுதி I

29. மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட கிரய அட்டவணை ஒன்றில் உள்ளடக்கப்படாத ஒரு உருப்படி
    (1) காணிகள் மற்றும் கட்டடங்களின் கிரயம் (2) வணிகத்தின் ஆரம்பக் கிரயம்
    (3) நன்மதிப்பு
    (4) கடன் தவணைகளுக்குமான பணக்கொடுப்பனவு
    (5) நிர்வாகச் செலவுகள்

30. பின்வருவனவற்றுள் நிதித்திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படாத ஒரு உருப்படி
    (1) மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று (2) கடன் மீள் கொடுப்பனவு அட்டவணை
    (3) மூலதன தேவைப்பாடுகள் (4) மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல்
    (5) ஊழியர் மரபுரிமைத் திட்டம் (Employee succession plan)

பகுதி II

வினா – 08

(iii) (அ) சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றிற்கான போட்டிப் பகுப்பாய்வின் போது கருத்திற் கொள்ள வேண்டிய நான்கு தகவல் உருப்படிகளைக் குறிப்பிடுக.

……

……

……

……

(ஆ) காசுப்பாய்ச்சற் கூற்றொன்றில் காசு உட்பாய்ச்சலுக்கான நான்கு உதாரணங்களை எழுதுக.

……

……

……

……

(v) (அ) மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்றொன்றின் தேறிய விற்பனையைக் கணிப்பிடுகின்ற முறையை எடுத்துக்காட்டுக.

.....

.....

.....

.....

.....

.....

(ஆ) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாடுகளுக்கான நிதித் தேவைப்பாடு தொடர்பில் நான்கு பிரதான கிரய உருப்படிகளைக் குறிப்பிடுக.

.....

.....

.....

.....